REGD. No. M. 3712.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

# வகுளமாலை.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்.

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்!
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே" — வகுளாபரணர்.

"அகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"
"தனக்குவமை யில்லாதான்றாள் சேர்ந்தார்க்கல்லான்
மனக்கவலை மாற்றலரிது" — திருவள்ளுவர்.

"உலகம் யாவையுந் தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலு நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கே சரணங்களே" — கம்பர்.

தொகுதி 1. ஈசுவர ௵ வைகாசி-ஆனிமீ பகுதி 6
Vol. 1. MAY, JUNE 1937. No. 6.

## உள்ளுறை.


| | | | |
|---|---|---|---|
| 1. | மாறனடிமெய்ம்மை. | பத்திராசிரியர். | 81 |
| 2. | திருவாய் மொழி அநுபவம். | ஸ்ரீ உபவே எ. வி. கோபாலாசாரியார். | 90. |
| 3. | பேரின்ப மெய்தவ தெங்ஙனம்.? | ஸ்ரீ உபவே ஸந்தானகிருஷ்ணய்யங்கார். | 93. |
| 4. | துண்டு துணுக்குகள். | பாரத்வாஜி. | 95. |
| 5. | பன்மணித்திரள். | பாரத்வாஜி. | 96. |
| 6. | வர்த்தமானங்கள். | | 97. |
| 7. | வேதாந்ததேசிகருசல். | பத்திராசிரியர். | 100. |
| 8. | எதிராசரந்தாதி. | | B. |


பத்திராசிரியர் :—
ஆர். கேசவய்யங்கார், M.A.B.L., அட்வகேட்.

வருஷம் 1-க்கு ரூ. ஒன்று.] [தனிப்பிரதி அணா ஒன்றரை.

# சௌத் இண்டியன் ஸ்டோர்ஸ்,

## திருவல்லிக்கேணி.

நேர்த்தியான மளிகை சாமான் நேராகத் தருவித்து செட்டு ரெம்பக்கம்மியாக்கி சீக்கிரத்தில் கொடுக்கிறோம். நேரிலே மின்சாரத்தில் வறுத்தரைத்த காப்பியும், கடைந்தெடுத்த கட்டியான வெண்ணெயும் கறுமணத்த புத்துருக்கு மேன்மையான நெய்யும், குழையாத பழவரிசி வியன்மிக்க வழுதாகும், சீக்கிரத்தில் மாவு போல் குழைந்து போகும் ருசியான பருப்பும், பார்த்தவரும் கேட்டவரும் பரிவுடனே வாங்கிடுவார். மிக்க புகழ் பெயர் பெற்ற பரிமளப் பாக்கு சீராக வுடைத்து உயர்ந்த நல்ல வாசனைச் சரக்கு நெய்யுடனே சேர்த்து வேண்டு மட்டும் விற்கிறோம். இக்கடையில் இடைவிடாது வாங்குவோர்க்கு இக்கட்டே இருக்காது. மிக்க பல முண்டாகும். நிரம்ப அறிவும் ஊறும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# வகுளமாலை.

தொகுதி 1. Vol 1. | ஈசுவர வருஷம் வைகாசி-ஆனி மீ MAY, JUNE 1937. | பகுதி 5 & 6. No. 5 & 6.

## மாறனடி மெய்ம்மை.

மறை நெறி தேறித் தூய மாறனார் பாதபற்பே
இறையெனு முறைமை காக்கும் திறமையே தெரிக்கும் தீரர்
முறை முறை முழங்கியாங்கே துறை துறை உயிரளிக்கும்
நிறைமொழி சொரிந்து யாண்டும் நிரம்பிய நியம்புவாமே.

இராமாயணமும் பாதுகா ஸஹஸ்ரமும் காட்டித்தந்தவாறு 'சடகோபன்' எனும் விலக்கணச்சந்தி தத்துவத்தின் பான்மை விளக்கப்பட்ட்து. "ஸாது" என்றதற்கு சந்தி அவாவுபவர், சந்தி செய்விப்பவர், என்றது பொருள். "சந்திமிச்சந்தி ஸாதவ:" என்றது ஸாதுக்களிலக்கணம். அன்பு பெருகுவது சந்திநிலத்தே. சாதுக்களே நல்லன்பராவார். சாதுக்களனைவரும் முறைய ஒவ்வோர் சந்தி தத்துவமென்ப. 'ஸத்' என்றதும், "ஸந்தாதா" என்றதும், "ஸந்திமாந்" என்றதும், பரனுக்கே உற்ற திருநாமங்கள். "லப்த்வாநு கதாப்யாவர்த்தயிஷ்யதி" என்றதும் பரனுக்கே உற்ற ஓர் அடையாளம். பரன் ஒருவனே "ஸத்" ஆயும், "ஸர்வஸந்தாதா"வாயும், "ஸர்வஸந்திமாந்" ஆயும், விளங்குபவன். பரனும் ஏனையரும் சந்தி செய்யும் நிலமே சடகோப தத்துவம். சடகோபன் பொன்னடி மேவினாரே 'ஸத்'துக்கள் என்றதை விளக்கிக் கொண்டே "ஸத்" சப்தத்தை முடியலங்காரமாய்க் கொண்ட பாதுகாஸஹஸ்ரம் அவதரித்து பாதுகம் பெற்று மீண்ட ப்ரதனையே 'பரனை ஒன்றினீரோ' "பேறு பெற்றீரோ" என்று பரன் திருப்பாதுகத்தையை தொழும் தகவுடைய பரத்வாஜ பகவான் உசாவினார். பாதுகம் சூடிய பரதன் நெறியையே "ஆர்யம் மார்க்

கம் ப்ரபந்நஸ்ய நாநுமங்யேதக : புமாங்"| என்று வான்மீக பகவான் போற்றிப் புகழ்ந்தார். ஸ்ரீசடகோபனையே "ப்ரபந்நஜநகூடஸ்தர்" "ஆத்யஸ்யந : குலபதே :" "குலதநம்" "குலதைவதம்" என்று ஆசிரியர் குழாங்கள் போற்றித் தொழுதற்கு வான்மீக பணித்த இத் திருப்பாசுரத்தை அடிகாண்க. விண்ணுளார் போற்றித் தொழும் வைகுந்தக்கோன் திருப்பாதுகத்துக்கு "ஸ்ரீசடகோபன்" என்றது திருநாமம். 'சூழ் விசும்பு' எனும் திருவாய் மொழியில் 'நிதி' என்றோதியதற்குப் பிள்ளானும் நம்பிள்ளையும் 'ஸ்ரீசடகோபன்' என்றும் 'திருவடி நிலை' என்றும் முறையே உரையருளியுள்ளார்கள். 'நிதி' எனும் சொல் பரனைப் பொதுவாயும், சடகோபனைச் சிறப்பித்தும் சுட்டும். உபநிடதம் 'நிதி' என்று பரவியதற்கும் சான்மேர் இவ்வாறே பொருள் கொள்வர். 'நிதி' என்றதற்குச் சொல்லளவை கண்டார் 'அடிநிலை' என்ற பொருளை நன்கே இசைவார். 'நிதி' எனும் வடசொல் 'ஆதாரம்' 'காப்பு' என்ற பெருளை உணர்த்தும் 'தா' என்ற வினைப்பகுதியினின்று, 'நன்கு' என்ற பொருளை உணர்த்தும் 'நி' என்ற உபஸர்க்கம் முன்னுற்று 'இ :' என்ற பிரத்தியயம் பின்னேறி 'நிதி' என்ற உருவம் அடைகிறது. 'திருவடிநிலை' என்ற பொருள் 'நிதி' என்ற சொற்கட் திகழ்வதை வ்யாகரணம் தானே கையோர்கனி என விளக்கும். ஆகவே இப் பொருள் வ்யுத்பத்தி ஸித்தம். "யதாதாரம் விச்வம் கதிரபிசயஸ் தஸ்ய பரமாதமப் யேகா தத்ஸே" என்ற பாதுகா ஸஹஸ்ரப்பாசுரம் இவ்வரிய இலக்கணப் பொருளையே உட்கொண்டது. பரன் திருவடி நிலையே சடகோபன் என்றதை பாதுகா ஸஹஸ்ரத்திற் போல் தமதரிய பன்னூல்களிலும் தேசிகனார் காட்டியுள்ளார். "தன் திருவடிகளுக்கு ப்ரதிநிதியான ஸ்ரீசடகோபனை" என்றது அபயப்ரதாநஸாரம். இங்குற்ற 'ப்ரதிநிதி' என்ற சொல் நன்கு நோக்கத் தக்கது. "ஸ்ரீசடகோபன் நிற்கும் பாதபீடத்தளவும் சென்று" என்றது பரமபத ஸோபாநம்.

பரன் படைப்பில் பல்பெரும் சந்திதத்துவங்கள் உள்ளன வென்று வடநூல்களில் காணலாம். உலகு காப்புறுமாறு அவை யாவும் பரனருளால் விளங்குகின்றன. 'நிமேஷ' 'காஷ்ட'ங்கள் தொடக்கமாய், 'பரார்த்த'மடைவாக, எண்ணரிய கூறுபாட்டை உடைத்தாய, நிரந்தர ஸகல விஜாதீய பரிணாமபரிஸ்பந்தஹேது

பூதமான, அலகிலாக்காலதத்துவத்து, 'காலை', 'உச்சிப்பகல்', 'மாலை', என்று கூறப்படும் முச்சந்திக்கண், சோதிக்திருச்சக்கர உருட்சியான், 'ஆதித்தன்' எனும் தத்துவம் முறையே இருக்காயும், யசுவாயும், சாமமாயும், மாறுகின்றான் என்றும், அக்காலத்து உலகுகாக்கும் 'காயத்ரீ' வேதியரால் தொழப்படவேண்டுமென்றும், அக்காலத்துத் தொழப்படும் அம்மந்திரமே சோதித்திருத்திகிரியை அறநெறிக்கண் நிறுத்தி உருட்டுவிக்கும் என்றும், அவ்வமயம் 'த்ரிஷவண' த்தவம் புரிவாரே "சாது"க்கள் என்றும், மறையானும், மறைப்பொருள் கண்டு தெளிந்த பராசர பகவரானும் விளக்கப்பட்டுள்ளன. மறைக்காட்சி பழகிக்கிடக்கும் முராரி எனும் மாக்கவிஞர் இப்பொருளை "பரிணமயதி ஜ்யோதிர் வ்ருத்த்யாயஜூம்ஷிருசாம்பதி:" என்ற ச்லோகத்திலும், "ஏதத்த்ரயீ மயம் ஜ்யோதி: ஆதித்யாக்யம்" என்ற ச்லோகத்திலும் விளக்கியுள்ளார். இச்சந்தியைச் சாதுவாக்குவாரே சாதுக்களாவர் என்றதை "ஸந்த்யாபாஸ ஸாதுஜந ப்ரதீக்ஷ்யா" என்றும், "முரத்விஷோ மூர்த்திரிவத்விதீயா" என்றும், யாதவாப்யுதயம் ஓதும். உலகமும், வேதமும், காலமும், சந்தி செய்ய நின்ற தத்துவம் "ஆதித்தன்" என்பான் என்ற மறை நுட்பம் தெளிவார் "வதுளபூஷணபாஸ்கரன்" என்ற ஒப்பற்ற சந்தி தத்துவத்தின் உண்மையை நன்கு உணர்வார். இந்நுட்பம் வந்துழிக்காண்க. அக்காயத்திரியைக் கண்ட விச்வாமித்ர பகவான் தானுமே தலைசிறந்த ஓர் சந்திதத்துவம் என்றது மந்திர மறைகளிள் பரப்பாய்ந்து தேறத்தக்கது. இம்மா முனிவர் உலகுக்கெல்லாம் உற்ற ஓர் அன்பர் என்றதை இவர் திருநாமமே உணர்த்தும். இவ்வொருவர்க்கே உற்றது அத்திருநாமம். இதை விளக்கவே "மித்ரே சர்ஷௌ" என்று பாணினி பகவான் சூத்திரம் பணித்தார். "கவி" என்றது வான்மீகிச்சுட்டு. அவ்வாறே "ரிஷி" என்றது விச்வாமித்ரச்சுட்டு உலகு நிற்பது பரன் மாட்டன்பில். அவ்வன்பு விளைந்து பொதிந்து நின்ற நிலமே 'காயத்ரீ' ஆம். காயத்திரி கண்டவர் 'இருடி'. அதன் பொருள் விரித்தவர் 'கவி'. இவ்வாற்றால் விச்வாமித்ரரும், வான்மீகியும், இருடிகட்கும், கவிகட்கும், கடவுளாயதற்கு அடிகாண்க: சரணகதி தர்மத்தை விளக்கும் மறைகட்கெல்லாம் காயத்ரீயே தாயாதலான் அத்தாய் மந்திரம் கண்ட இவரே இருடிகட்கெல்லாம் தலைவ

ராய் பரனோடொக்கப் பொலிந்து நின்ற அரிய ஓர் அற மூர்த்தியாயினர். "மந்திரங்கொள் மறை முனிவன்" என்று குலசேகரப் பெருமாள் இவரைத் தமது புந்தியிற்கொண்டதற்கு அடி ஈண்டுத் தெளிக. காயத்ரீ விளக்காய இராமாயணமா மறையே இம்மாமுனிவரை "ஏஷவிக்ரஹ வாந்தர்ம:" "ஏஷபுத்யாதி கோலோகே" "தபஸச்சபராயணம்" "நைகமங்ய : புமாந்வேத்தி நவேத்ஸ்யந்தி சகேசந | நதேவா : நர்ஷய : கேசித்......" என்று பரனோடொக்க விளக்கியருளிற்று. காயத்ரீகண்ட இம்முனிவரே "விச்வாமித்ரர்". (உலகுக்கெல்லாம் அன்பர்). அன்பார்ந்தாரே "மித்ரர்". காயத்ரீயே "விச்வஜநநீ". இம்மந்திரங்கொள் மறைமுனிவரே உலகுக்கெல்லாம் உற்ற ஓர் அன்பர். இத்திறவீறு பெருத்த இவரையே "ஏஷவீர்யவதாம் வர:" என்று வான்மீகி அறைந்தார். 'சக்திமாந்' (வல்லார்) என்றதற்கு எம்பார் இவரையே இலக்காக்குவர். இவர் ஒருவரே தன்னருங் குழவியைப் பிறர் வேள்விக்கு ஆக்கிடுவர். வேள்விக்கு இடப்பட்ட பிறர் குழவியைத் தன் குழவியாக்கிக் காத்தருளுவர். தன்னைச் சரணென்றணுகினோரைச் சுவர்க்கம் புகுவிக்கும் தனிமாண்பர். பிராட்டியையும் பெருமானையும், ஜநககுலத்தையும் ரகுகுலத்தையும், வேதத்தையும் உலகத்தையும், அறத்தையும் உண்மையையும் இவரே சந்தி செய்விப்பர். இவரிடத்தே அவையாவும் அவாவிச்சந்தி செய்தன. வான்மீகி தாமே போற்றிப்புகழ்ந்த இவரது தனிமான்மியத்தை வடமொழிக்கவிவாணர்களும் நங்கவிச்சக்ரவர்த்தியாகிய கம்ப நாடரும் நாடு நகரமும் நன்கறியப் பறைசாற்றியுள்ளார்கள். இப்பகவரை "குலபதி" என்பர் காளிதாஸர். இவரைச் சுட்டுமிடத்து இச்சொற்கு "முனிவர் குலத்துக்கு இறை" என்று மல்லிநாதர் உரையிடுவர். இருடிகட்கெல்லாம் இவர் உவமையாவர் என்றது முராரிஹிதயம். "ஜநகாநாம்ரகூணாம்ச சம்பந்த : கஸ்யநப்ரிய :| யத்ரதாதா க்ரஹீதாசஸ்வயம்குசிகநந்தந :" என்றும், ஈண்டுற்ற "ஸ்வயம் குசிகநந்தந:" என்றதைமட்டிலும் வேறிடத்து "கல்யாணப்ரதிபூ : பவாந்" என்றும் விளக்கி, இவ்வரிய சந்திதத்துவத்தின் நுட்பத்தையும் தூய்மையையும் பவபூதி வெளியிட்டுள்ளார். அன்பர்க்கெல்லாம் தலையாய இவ்விருடியின் அமுத மொழியை மறைகள் தாமே அடியொற்றிப் பின் செல்லும் என்றதை "வாசமேவம் ரிஷீணாம்ஹி சாஸ்த்ரமேவாநுவர்த்ததே" என்றும், சென்ற காலமும் வருங்காலமும் இம்

மறைக்கண்ணரிடத்தே சந்தித்து நிகழ்காலமாயே நிகழும் என்றதை "அயம் ஆர்ஷேணசக்ஷுஷா| காலெள பூதபவிஷ்யந்தெளவர்த்தமாநமிவீக்ஷத் ||" என்றும் முராரி எடுபட்டார். சந்தி தத்துவத்தின் உண்மை தேறி பாதனுக்கே தொண்டு பூண்டு விளங்கும் சத்ருக்கினனை "பாதுகாப்ருத்யாநு ப்ருத்யன்" என்று சுட்டும் இக்கவிவாணர் சந்தியின் பெருமையை விச்வாமித்ரபகவான் வாயிலாகவே "பத்யேக்ருத்ய கநம் திரோதி ஜலதி: ஸ்வைரம்புவி: மேதிநீம் ......" என்ற ச்லோகத்தால் நன்கறைந்துள்ளார். இவ்வுலகும் அவ்வுலகும், மண்ணும் கடலும், உலகமும் வேதமும், பொருளும் அருளும், சந்திப்பது வானிடையே என்ற பல்லரிய மறைப்பொருள்களை இம்மாக்கவிஞர் குறிக்கொண்டிருப்பது போற்றிப் பேணத்தக்கது. இக்கருத்தை நம் நாயனர் பொதுமறை புலப்படுத்தும் பெருமையைப் பரிமேலழகர் உரையிற்காண்க. வான்மீகி தாமே விச்வாமித்ரரை வானெடொப்பிட்டு அம்மாமுனிவர் கீர்த்திமை பாடியதே இவையனைத்துக்கும் அடியாகும். "யதா அம்ருதஸ்ய ஸம்ப்ராப்தி: யதா வர்ஷம நூதகே" என்று அவ்வரியவான் சிறப்பை அம்முதற் பாவலர் ஆண்டுத் தொடங்கினர். "அமிழ்தம்" என்றே இம்முதற்பாவலரும் ஈண்டுத் தொடங்கினர். வான்மீகி இதயத்தை விளக்கும் முராரி ச்லோகத்தையும், தெய்வப் புலமையினேர் கருத்தை விரிக்கும் பரிமேலழகர் உரையையும், ஒப்பிட்டு மகிழ்க. "இம்பரிந்நகரிற்ரந்த முனிவனை இறைஞ்சுமென்பார்" என்றது இச்சந்திதத்துவத்துக் கம்பர் அருமைப்பாடு. சரணகதி தர்மமே நல்வடிவெடுத்தாப் போல் தோன்றிய வேதாவதாரரென்னும்படி விளங்கும் விச்வாமித்ரரையே "உலகுக்கன்பர்" என்றும், வான்போன்ற சந்திநிலமென்றும் வடநூல் பெருமுழக்கம் செய்யாநிற்கும்.

அவ்விச்வாமித்ர முனிவரிலும் தூயராய், அவ்வன்பர் தமக்கும் நல்லன்பராய், அன்னுரையும் தம்முட் பரமாணுவாக்கும் தமிழ் மறைப்பருப்பதமாய், அப்பன் பொற்பாதுகமாய், அப்பனும் அடியாருப் ஒன்றித்திகழுமோர் தனிச்சந்தி நிலமாய், திருநாரணன் ஒருவனே தமக்கு மாறு என்னலாம்படி மதிநலமருளும் தெள் அருள் மாரியாய தெள்ளிய மாறப்பிரானைப் பொலிபாநிற்கும் திருக்குருகூர்ப் புனிதர் மான்மியம் சொல்லுக்கும் மனத்துக்கும்

அப்பாலதென்றது கைமுதிகத்தால் பெறப்படும். நம் சடகோபனது மான்மிய மீமாஞ்சை செயப்புக்கால் ஆநந்தமீமாஞ்சை வரலாறே பின்னுமிரட்டிக்கும். இவ்வாறு செழித்து வளரும் நம்மாழ்வார் பெருமையை நம்நாடுதொன்று தொட்டே நன்கறிந்துளதென்றது, புராணப்ரஸித்தியானும், ஐதிகத்தானும், கவிச்சக்ரவர்த்தி வாக்கானும், எம்பெருமான் திருப்பதிகளில் இன்றுகாறும் ஒரு முகப்பட்டே நடந்தேறிவரும் ஆசாரணையானும், எம்பெருமான் திருவுள்ளத்தானும், மேலையாருடம்பாட்டின் மிகையானும், கையிலங்குகனி எனத்தெளியவல்லது. என்னை? கூறுதும்.

யுகவர்ண க்ரமத்தாலே, கலியுகத்தில் கலி கெடுக்கும் பெருந்தகையோர்களான நாராயண பராயணர்கள் தமிழ் நாட்டில் தாம்ரபர்ணீ முதலிய நதீதீரங்களில் அவதரிக்கப் போகிறார்கள் என்ற ஆழ்வார்கள் அவதார ரஹஸ்யத்தை.—"ஏவம்யுகாநுரூபாப்யாம் பகவாந்யுகவர்த்திபி:"| என்று தொடங்கி "கலௌகலுபவிஷ்யந்தி நாராயணபராயணா:| க்வசித்க்வசித்மஹாராஜத்ரவிடேஷு சபூரிச:| தாம்ரபர்ணீ நதியத்ரக்ருதமாலா பயஸ்விநீ| காவேரீசமஹாபுண்யா ப்ரதீசீச மஹாநதீ|| யேபிபந்திஜலம் தாஸாம்மநுஜா மநுஜேச்வர| ப்ராயோ பக்தாபகவதி வாஸுதேவே அமலாசயா:|| தேவர்ஷிபூதாத்மந்ருணாம் பித்ரூணாம் நகிங்கரோ நாயம் ரிணீசராஜந்| ஸர்வாத்மநாயச்சரணம் சரண்யம்கதோமுகுந்தம் பரிஹ்ருத்யகர்த்தம்|| ஸ்வபாதமூலம்பஜத: ப்ரியஸ்ய த்யக்தாந்யபாவஸ்ய ஹரி: பரேச:| விகர்மயச்சோத்பதிதம் கதம்சித் துநோதி ஸர்வம் ஹ்ருதிஸந்நிவிஷ்ட:||" என்று வேதவியாத பகவர்தாமே தம் திருப்பாகவதத்து முழங்கிய இத்திருப்பாசுரப்பந்தியே வைதிகர்கட்கு உற்ற ஓர் தனிச்சான்றாகும். இது ஸ்ரீதரஸ்வாமி பாடம். யுகவர்ண க்ரமத்தாலே என்றதாலும் கலௌ என்றதாலும் அவதார வருணம் சுட்டப்பட்டது. "பக்தா:" "நாராயண பராயணா:" என்ற பன்மையால் "ஆஸ்தே விஷ்ணு: அசிந்த்யாத்மா பக்தை: பாகவதை: ஸஹ" என்று ஓதிய "பக்தர்"களே ஆழ்வார்களெனப் பொதுவாயும், "ஸர்வாத்மநாயச்சரணம் சரண்யம் கதோ முகுந்தம் பரிஹ்ருதயகர்த்தம்" என்ற ஒருமையால் பின்னும் நம்மாழ்வாரே சிறப்புத் தோற்றுமாறு குறிக்கொள்ளப்பட்டுள்ளாரென்றது உற்று நோக்கத்தக்கது. "வாஸுதேவ: ஸர்வம்" "உண்ணும் சோறு, பருகு

நீர், நின்னும் வெற்றிலையுமேல்லாம் கண்ணன்.'' என்று விடாய்த்துப்பெற்றவராயும், அவர் தம்மிலும் "ஸமஹாத்மாஸுதுர்லப:'' என்று பரன் தன்னாலுமே பெருவிடாயெடுத்துப் பெறப்பட்டவராயுமுள்ள, ஆழ்வாரே இப்பாசுரத்திக்கு விடயம் என்றதை நம்பெரியோர்கள் விரித்துள்ளார்கள். ஸ்ரீதரஸ்வாமி உரைக்குமே ஆழ்வாரே இலக்கியமாகத் தடையில்லாமையானும், ஆழ்வாரிடத்தே அவ்வுரையும் நன்கு பொருள்படுவதாலும் இப்பாகவதப் பாசுரங்கட்கு ஆழ்வாரே பொருள் என்றது ஐயமறத்தேறவல்லது. ஆழ்வார் தனிமான்மியம் தேற இப்பாகவதப்பங்தி கண்டார் பிறிதோர் சான்று வேண்டார். "கலௌ தேவ: பராங்குச.'' என்றதும், இதுபோன்ற புராண வாக்கியங்களும் ஆழ்வார் அவதார ரஹஸ்யத்தையே அறிவுறுத்தும்.

உருளுடை நேமிமன்னவன்புதல்வனது திருவடிகண்டடையவே மதுரகவியார் அயோத்தி ஏகி அவனடிச் சோதிக்காட்சியே பழகிக்கிடக்குங்கால், தென்திசையில் திளக்கற்ற சோதி ஒன்று தோற்றக்கண்டு, அத்தோற்றத்தையே இலக்காகக் கொண்டு திருக்குருகை அடைவாக வழி நடந்து, ஆண்டே அச்சோதி நம் சடகோபனைப்பொலிந்து நின்றது தெளிந்து அன்னார் பொன்னடியே தத்துவமெனக் கண்டடைந்து போற்றி மகிழ்ந்து பரமபதம் பெற்றார் என்ற ஐதிகம் இதுகாறும் கூறிவந்த கருத்தையே உட்கொண்டதொன்றாகும். "நண்ணித்தென்குருகூர் நம்பி" என்றதும் "மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே'' என்றதும் இவ்வைதிகத்தின் உண்மையையே வலியுறுத்தும். ஆழ்வாரது பெருமையை சங்கப் புலவரவையத்து நிலைநாட்டக் கருதி மதுரகவியார் "கண்ணன் கழலிணை'' என்ற பாசுரத்து ஆழ்வாரைக் குறிக்கொள்ளும் அவ்வளவேகொண்டு விளக்கிக் காட்டியவாறே, ஆழ்வாரைக் கண்ணன் கழலிணை என்றே கண்கொண்டு கண்ட அப்புலவரனைவரும் "சேமம் குருகையோ செய்ய திருப்பாற்கடலோ நாமம் பராங்குசமோ நாரணமோ'' என்றே "திண்ணம் நாரணமே'' என்ற ஈற்றடிக்குத் "திண்ணம் பராங்குசமே'' என்று பொருள் தெளிந்தார்கள் என்ற ஐதிகமும், வான்மீகி விளக்கிய "பரன் திருப்பாதுகமே பரன் திருப்பாதம்'' என்ற ரஹஸ்யத்தையே வெளியிட்டுக் கொண்டதாகும். மேற்கூறிய பாகவதப்பாசுர உண்மையைக் கண்ணாரக்கண்ட

ஓர் சித்தர் "வாய்க்குங்குருகைத் திருவீதி எச்சிலை வாரியுண்ட நாய்க்கும் பரமபதமளித்தாய் அந்த நாயொடிந்தப் பேய்க்குமிட மளித்தால் பழுதோ பெருமாள் மகுடம் சாய்க்கும்படிக்குக் கவி பாடிய ஞானத்தமிழ்க் கடலே" என்று முழங்கிப் போந்தார். இவ் வைதிகங்கள் நிகழ்ந்தவாறு எத்தன்மைத்தாயினும் அவை உட்கொண்ட கருத்தை ஆழ்வார் விபவத்தில் விளங்கிய காலத்தே தமிழகம் நன்கறிந்ததென்றதை விளக்கப் போதிய சான்றாகும். ஈண்டைக்கு இவ்வளவே இவ்வைதிகங்களிடத்து யாம்கொள்வது.

கல்வியிற் பெரியாரும் கவிச்சக்ரவர்த்தியுமான கம்ப நாடர் இப்பொருளனைத்தையும் பரக்க விரித்துள்ளார். பரன் திருப்பாதுகம் தான் இவ்வாழ்வார் என்றதை:—"திருடித் திருடித் தயிருருக்குந் நெய்யோடுண்டானடிச் சடகோபன்...... பொருநற்குருகூர் எந்தை......" என்றும் "திருநாடனை வேலைசுட்டசிலையிராமுதினடிச் சடகோபனைச் சென்றிறைஞ்சும் தலையார் எம்மையாளும் தபோதனரே." என்றும் கம்பர் அறுதியிட்ட வாற்றான் திருநாட்டிலும், திருவயோத்தியிலும், திருக்குருகூரிலும் விளங்காநிற்கும் ஓரொருவரே பரனடிச் சடகோபன் என்றது தெளிக. சடகோபன் ஒப்பரிய ஓர் சந்தி தத்துவம் என்றதை "சுடர்தோய் சந்தனச் சோலைக் குருகைப்பிரான் வந்து சந்தித்ததே" என்றும், "சந்தியும், சந்திப்பதமும், அவை தம்மிலும் தழைக்கும் பந்தியும், பல்லலங்கார ப் பொருளும்......" என்று சிலேடை பல்கும் சொற்பந்தியாலும், "இராவணன் தன் பொன்முடியால் கடல்தூர்த்த வில்லான் பொருனைத்துறைவன் தன்முடியால் அவன் தாளிணைக்கீழ் எப்பொழுதும் தழீ இச்சோன்முடியால்......" என்றும், "குருகையிற் கூட்டம் கொண்டார்...... என்னை வானின் வரம்பிடை நின்றழைத்தார், அறிவும் தந்தார், அங்கும் போயவர்க்காட் செய்வெனே..." என்றும் விளக்கிப்போந்தார். மாறன் (விலக்ஷணன்) என்ற அவதார நட்பத்தை "பாவகத்தால் தன் திருவவதாரம் பதினென்றென்றிப் பூவகத்தார் அறியாதவண்ணம் தன்னையே புகழ்ந்து நாவகத்தாற் கவியாயிரம்பாடி நடித்தளித்த கோவகத்தார்..." என்று போற்றிப் புகழ்ந்துள்ளார். இங்குற்ற "கோவகத்தார்" என்றது இருகலைப் புலவர்கட்கே இன்பம் பயக்கும். வான்மீகி பரவிய பொற்பாதுகம் இவ்வாழ்வாரேயாவர் என்றதை "மறையோர் பெற்ற ஆணிப்

போன்னே" என்று குறிக்கொண்டார். வகுளமாலை பணிந்து தமிழ்மறையாயிரம் பாடிய நாதன் திருமணிப்பாதுகம் இவ்வாழ்வாரே என்றதை "வகுள மணம் வேண்டும், தண்டெரியற் பெருமான் செய்யுண்மாமணியின் கணம் வேண்டும்" என்றார். "வகுளதாத நாஸ்த்வம் ஸம்ஹிதாம்யாமபச்ய:" என்றதற்கு இது தமிழாய் நின்றது. திருவாய்மொழியே "ஸம்ஹிதாஸார்வபௌமீ" "பாதுகே பூர்வகன்யா" என்றதை "வேதத்தின் முன் செல்க.. குணங்கடந்த போதக் கடலெங்கடென் குருகூர்ப் புனிதன் கவியோர் பாதத்தின் முன் செல்லுமே தொல்லை மூலப்பரஞ்சுடரே" என்றும், "திருவாயிரமோக்க மாலை" என்றும் விரித்துள்ளார். "குருகைப்பிரான் வந்து சந்தித்ததே" என்ற சடகோபரந்தாதிச் செய்யுள் இன்றளவும் ஆழ்வார் திருநகரியில் சந்திப்பு உற்சவத்தில் அத்தியாபக கோஷ்டியில் அந்தணர்களால் ஓதப்பட்டு வருதல், ஆழ்வார் விலக்ஷணரான 'ஸந்தாதா' "ஸந்திமாந்" என்றதை வற்புறுத்தப் போகிய ஓர் சான்றாகும். சடகோபனைப் பாடுதலே இராமாயணம் பாடுதலாம் என்ற வான்மீகி திருவுள்ளத்தைப் பரஞ்சுடர் தானே கம்பர்க்கு விளக்கியருளி, சடகோபரந்தாதி பாடச் செய்து, அவ்வாற்றால் அவரைத் திருத்திப்பணிகொண்டு அவரியற்றிய காதையை இராமாயணமாக ஏற்று, அவரைக்கவிச் சக்ரவர்த்தியாக்கிய பான்மை ஒன்றே சடகோபனிடத்து நம்பெருமாளுக்குள்ள அருமைப்பாடு எத்தன்மைத்து என்றதை நன்கே விளக்கும். சடகோபனைப்பாடாதவரை இராமாயணம் பாடியதாகா என்ற அரிய நுட்பத்தை "நம் சடகோபனைப் பாடினையோ என்று நம்பெருமாள் விஞ்சிய ஆதரத்தாற் கேட்ப..." என்ற சடகோபரந்தாதிப்பாயிரச் செய்யுளை நன்கு ஆய்ந்து தெளிக. வான்மீகி போற்றிய பாதுகமும் கம்பர் பாடிய சடகோபரும் ஓர் தத்துவமாம் என்றதை பரன் இவ்வாறு உகந்து விளக்கியபடி. இப்பொருள்களுக்கெல்லாம் சிஷ்ட பரிக்ரஹம் உண்டென்றதைக் கம்பர் தாமே "...உற்றார் தமக்கும் சான்றாம் இவையென்றபோது மற்றென்" என்றும், "மாறனென்றால் பதுமாகரங்கள் முடியெடுத்துக்கொண்ட அந்தணர் தாள் என்முடி எனவே" என்றும் மாரி முழக்கம் செய்யாநின்றார். இப்பொருளனைத்தையும் உலகத்தாரறியுஞ் சான்றாக பரன் கோயில்கொண்ட திருப்பதிகளிலெல்லாம் ஆழ்வாரையே பரன் திருப்பாதுகமாய் ப்ரதிஷ்டை

செய்து, திருவாய்மொழி ஓதி, மாறன் சடகோபனென்று பரனோடொக்கத்தொழுது வருதலானும், பிறிதோர் பெரியாரையும் பரன்பாதுகமென்று கொள்ளாமையானும் அந்வயவ்யதிரேகங்களால் இவ்வாழ்வாரே வான்மீகி வழிபட்ட நாதன் திருப்பாதுகம் என்று கண்களாரக்காணற்பாலது. இவ்வாறு லோகவேதப்ரஸித்தியும், நிரவக்ரஹசிஷ்டபரிக்ரஹபாஹுள்யமும் கண்டு மாறனடி மெய்ம்மை எத்துணைச்சான்றுடைத்து என்றதை உள்ளித் தெளிக. மாறனார் தாமே தம்மெய்ம்மையைப் பாடியருளிய பாசுரங்களுட் சிலவற்றை வரும் பகுதியில் எடுத்துக்காட்டுவோம்.

மறைச்சிரமருவுமான்றோரன்று தொட்டின்று காறும்
அறைமறை செழித்த மாறன் அமிழ்திணையடியே மூழ்கும்
முறைமையே பழகிவாழு மூதுவருலகுவாழ
நிறையரித்திருவாயோது நிதியெனும் நிலைவிரித்தோம்.

பத்திராசிரியர்.

---

# திருவாய்மொழி அநுபவம்.

(முன்தொடர்ச்சி)

ஸர்வகாரணப் பொருளையே தான் த்யாநம் செய்யவேண்டும், காரணத்தை த்யாநம் செய்தால்தான் மோக்ஷம் கிடைக்கும் என்று வேதம் ஓதுகிறது. மோக்ஷ தசையில் இரண்டு விபூதிகளோடும் கூடிய ப்ரஹ்மம் ஆநந்தமாக அனுபவிக்கப்படுகிறது. ப்ரஹ்மத்தின் ஸகல கல்யாணகுணங்களும் ப்ரஹ்மத்தோடு இனிது அனுபவிக்கப்படுகின்றன. ப்ரஹ்ம ஸூத்ரகாரர் ப்ரஹ்மத்தை விரும்பி அறியவேண்டுமென்று முதல் ஸூத்ரத்தில் சொல்லி, அது ஸகல ஜகத்துக்கும் காரணம் என்று ஓதும் தைத்திரீய உபநிஷத்திலுள்ள லக்ஷணவாக்யத்தை ப்ரஹ்மத்தின் லக்ஷணமாக அடுத்த ஸூத்ரத்தில் காட்டினார். திருவாய்மொழி பகவானை இடைவிடாமல் த்யாநம் செய்யும் க்ரந்தம். ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம், குணம், அதற்கும் நமக்குமுள்ள சம்பந்தம் முதலிய எல்லாவற்றையும் நமக்கு உபதேசிக்கும் நூலாகும். ஸூத்ரகாரரைப்போல் த்யாநாநுபவக் கடலில் மூழ்கும் ஆழ்வாரும் முதலிலேயே ப்ரஹ்மத்தை ஸர்வகாரண

மென்று காட்டுவது உசிதம். முதலடியிலேயே முதல் பாசுரத்தி லேயே ப்ரஹ்மம்தான் ஸர்வ காரணமென்றதைக் காட்டியே ஆக வேண்டும். இதை ஆழ்வார் முதலடியிலேயே அழகாகக் காட்டி யருளுகிறார். எங்ஙனே என்னில், காட்டுவோம்:—

முதலடியில் ப்ரஹ்மத்தை ஆநந்தம் என்றும், ஆநந்தமயமென் றும் ஆழ்வார் தெளிவாக விளக்குகிறார். "நலமுடையவன்" என்று ஆநந்தமயன் என்பதையும், "நலம்" என்று ஆநந்த ஸ்வரூபத்தை யும், சேர்த்து அமைத்தருளினர். 'நலம்' என்றதோடு நிறுத்தி, ஆநந்த ஸ்வரூபம் என்னும் 'நலம்' என்பதைக்கூறி, அவன் ஸர்வ சேஷி என்பதை முதலிலேயே காட்ட "உடையவன்" என்று தனிப்பதத்தால், விளக்கவும் திருவுள்ளம். "என் ஸ்வாமி" "எல் லோருக்கும் ஸ்வாமி" என்று முதலிலேயே தொடங்குவது மிக வும் அழகே. முதலடியில் 'உடையவன்' என்று ஸர்வ ஸ்வாமித் தன்மையைக் கூறுவதாலும், இரண்டாமடியில் 'அருளினன்' என் பதாலும், மூன்றாமடியில் 'அதிபதி' என்பதாலும், நான்காமடியில் 'அடிதொழுது' என்பதாலும், ஸ்வாமி எனபதை நான்கு அடி களிலும், விச்வரூபத்தை ஸேவித்த அர்ஜுநன் 11-வது அத்தியா யத்தில் ஸம்ப்ரமத்தோடு பேசுவதுபோல், ஆழ்வாரும் திரும்பத் திரும்பப் பேசுகிறார். உ, ம், அ, து, என்ற நான்கு எழுத்துக்க ளுடன் நான்கு அடிகளைத் தொடங்குவதாலும், நான்கையும் கூட்டி 'உமது' என்று தாமும் அவனதே என்றதையும் காட்டியருளுகி றாரென்று பெரியோர் பணிப்பர். இதற்கேற்ப முடிவிலும் "முனி யே நான்முக"னில் "எனதென்பதென், யானென்பதென்" என்று ஸ்வத்வ ஸ்வாதந்த்ர்யங்களை மறுப்பதும் நோக்கத்தக்கது. ஆழ் வாருக்கு இதில் முக்கியமான திருவுள்ளம் என்றதை ஸ்ரீ ஆளவந் தாரும் "நாதனே, மாதவ, எனதென்பது யாதுளதோ, யானென்று யவனுளனே, அதுமுற்று முனதேயல்லாது மற்றில்லை" என்று விளக்கியருளினர். "என் முதற்றனிவித்தேயோ", "முதற்றனி வித்தேயோ முழுமூவுலகாதிக்கெல்லாம் முதற்றனி யுன்னையுன்னை" என்று "முனியே நான்முக"னில் நான்முடிவில் விண்ணகரெழுந் தருளுமுன் காரணப்பொருளான தன்மையில் ஈடுபடுகிறார். அது திருவாய்மொழி ஈற்றில் 9-வது பாசுரம். முக்திபெறும் தருணத் தில் அநுசந்தித்தது. அந்திமஸ்மரணமான ஆநந்தரூப ஜகத்கார

ணத் தன்மை, நூல் தொடக்கத்திலிருந்து முழுதும் மறப்பறப் போருகிறது. தொடக்கத்திலேயே காரணத்தன்மையை இன்பமாக அநுஸந்திக்கிறூர். ஸூத்ரகாரரும் ஜகத்காரணமென்று தொடக்கத்தில் அநுஸந்தித்து நான்முடிவிலும் "ஜகத்வ்யாபாரம்" ஈச்வரனுக்கே உற்றது என்று கூறி அவனே காரணம் என்றதை அநுஸந்தித்தார்; "முனியே" என்ற விளியால், ஆழ்வார் 'காரணமே' என்றழைத்ததாகிறது. ஜகத்காரண லக்ஷணத்தை விளக்கும் தைத்திரீய உபநிஷத்தில் ஈசுவரன் 'மௌநம்' என்னும் "சிந்தந"மாகிய தவத்தைச்செய்து நன்கு ஆலோசித்து உலகு வாழவேண்டுமென்ற கருத்துடன் படைப்பைச் செய்தான் என்று ஓதப்பட்டது. "அவன் தவம் செய்தான், அவன் தவம் செய்து இவையாவையும், படைத்தான்" என்றது வேதம். 'தவம்' என்றது 'ஆலோசனே'யைச் சொல்லும். "முநி" என்பவர் தவசி, ஆலோசிப்பவர். "ஜகத்தின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம், இவற்றிற்கு எப்பொருள் காரணமோ, அதை நீ விரும்பி அறிவாயாக (தொழுவாயாக): அது ப்ரஹ்மம்" என்று தொடக்கத்தில் பொதுவாகப் பேசும் தைத்திரீய ச்ருதி, இறுதியில் "ஆநந்தத்திலிருந்துதான் இப்பொருள்களெல்லாம் உண்டாகின்றன; ஆநந்தத்திலேயே ஜீவிக்கின்றன; ஆநந்தத்திலேயே லயிக்கின்றன" என்று சிறப்பித்து ஓதி 'ஆநந்தம் தான் ஜகத்காரணப் பொருள்' என்றதை வலியுறுத்தி அறுதியிடா நின்றது. "ஆநந்தம்தான் ப்ரஹ்மம்" என்று அதற்கு முன் வாக்கியத்தில் ஓதப்பட்டது. அதனுல் காரணப்பொருள் என்றது ஆநந்த ப்ரஹ்மமேயென்றும், ஆநந்த ப்ரஹ்மமே காரணமென்றும், இருவகையாலும் அறுதியிடப்பட்டது. ஸூத்ரகாரர் 'காரணம்' என்கிற பொதுவான தொடக்க (உபக்ரம) வாக்கிய இலக்கணத்தைக் காட்டியதால் அதே ச்ருதியினிறுதியில் நிர்ணயமாக ஓதப்பட்ட வாக்கியத்தையும் சூசிப்பித்து "காரணமான ப்ரஹ்மம் ஆநந்தமே" என்றதைக் குறிக்கொண்டார். ஸூத்ரகாரருக்கு ஜகத் காரணம் என்னும் லக்ஷணத்தை விரிக்குங்கால் ஆநந்தம் என்பதைக் காட்டுவதில் நோக்குளது என்றதை ஆழ்வார் இப்முதலடியால் விளக்குகிறூர். "யவன் ஆநந்தமோ அவன் ப்ரஹ்மம்; அவன் எம்மடி" என்றதால் அவனே ஜகத்காரணம் என்றதையும் விளக்குவதில் ஆழ்வாருக்குத் திருவுள்ளம் தைத்திரீயச்ருதியின் தொடக்கத்தைக் காட்டிக்கொண்டு காரணப்பொருள் ஆநந்தமேயென்று

இறுதியில் தேறியதை ஸூத்ரகாரர் குறிக்கொண்டார். ஆழ்வார் ஆநந்தமே ஜகத்காரணம் என்று இறுதியில் தேறிய ஆநந்தத்தைப் பேசி முடிவிலும் தொடக்கத்திலுமுள்ள காரணத் தன்மையை விளக்கியருளுகிறார். த்யாநம் செய்யப்பட வேண்டிய காரணப் பொருளின் இனிமையை தைத்திரீயச்ருதியின் முடிவு காட்டிற்று. ஆநந்தத்தை இங்கு ஆழ்வார் முதலிலேயே தம் திருவாக்கால் பேசி "இனிப்போடுமுடி" என்பர். இனிப்போடு தொடங்கி இனிதே பேசிப்பாடி, இனிப் போடே இந்நூல் இனிது முற்றிற்று ஜகத் காரணம் என்னும் லக்ஷணத்தைக் கூறிய ஸூத்ரகாரருக்கு அந்த ச்ருதியின் முடிபான உறுதி வாக்யத்தில் காரணமானப்ரஹ்மம் ஆநந்தமே யென்று ப்ரஹ்மத்தின் எல்லையற்ற இனிமையையும் காட்டுவதில் திருவுள்ளம் என்பதை ஆழ்வார் விளக்கியருளுகிறார். ஆநந்தவல்லியையும் ப்ருகுவல்லியையும் கூட்டிப்பொருள் காட்டுகிறார். ஆழ்வார் காட்டித்தந்த இவ்வரும் பொருளை ஸ்ரீ சங்கராசாரியரும் லக்ஷணத்தைச் சொல்லும் இரண்டாவது ஸூத்ரத்தின் பாஷ்யத்தின் முடிவில் காட்டினர். சங்கரபாஷ்யம் ஆழ்வாருக்குப் பிந்தியது. இம்முதற்பாசுரத்தின் முதலடி லக்ஷணஸூத்ரத்துக்கு இப்படி வியாக்கியானம்செய்வது ரஸிக்கத்தக்கது.

ஏ. வி. கோபாலாசாரியார்.

---

# பேரின்பமெய்துவ தெங்ஙனம்?

'சிற்றின் பச்சிறுமையையும் பேரின்பப் பெருமையை'யும் சென்ற பகுதியில் சுருக்கியுரைத்தோம். இவ்விரண்டு விஷயங்களையும் பற்றிச் சிறிது ஆழ்ந்து யோஜிப்போர்க்குப் பேரின்ப மெய்த வேணு மென்னு மவா உண்டாகு மென்பது திண்ணம். அவா உண்டானவாறே அதனையடையும் வழியைத் தெரிந்து கொள்ள விருப்ப முண்டாகும்.

பேரின்ப மென்பது கடவுளுலகில் ஆன்மாக்களடையுமின்ப மென்று முதல் பகுதியில் சொல்லப்பட்டது. அக்கடவுளுலகுக்கு வைகுந்த மென்று பெயர். அடியார் மனமுவந்து சூட்டிய வகுள

மாலை புனைந்த நம்மாழ்வார் தம்மினிய திருவாய்மொழியில் "வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே" யென்று நம்மவரையும் வைகுந்தத்திற்குரிமையாக்கினர். ஆகவே நாம் வைகுந்தம் புகுவோமென்பது நிச்சயம். ஆனால் நாம் அவ்வுலகத்தையடையும் விதமெப்படி?.

ஒரு சிறிய உதாரணத்தை யெடுத்துக் கொள்வோம். நியாயாதிபதி யென்ற ஸ்தான மொன்றிருக்கின்றது. அதனைச் சட்டங்களறியாத மூடனொருவன் அடைய முடியுமா?. முடியாது. சட்டங்கள் படித்துத் தேறினவர்களே அதற்குறியர். அது போலவே வைகுந்தப் பதவியை அடைவதற்கும் நாம் சில விஷயங்களில் தேற்றம் (தெளிவு) அடைய வேண்டும். அவை சுருக்கமாய் வருமாறு:—

பரனென்று சோல்லப்பட்ட ஈசனுடைய பெருமை: ஒருவரால் நமக்கோர் காரியம் நடக்க வேணுமானால் அதை நடத்தி வைக்கக் கூடிய வல்லமை யுடையவனை யறிந்து நாம் செல்ல வேணுமேயொழிய அவ்வல்லமை யில்லாதவனிடம் சென்றால் என்ன பயன்?. பாம்பு கடித்தவனுக்குத் தேள் வைத்தியன் என்ன செய்ய முடியும்?. ஆகையால் நம்முடைய ஸகல விதமான துக்கங்களையும் தீர்க்கக் கூடிய ஈசனுடைய பெருமையை நாம் உள்ளபடி யறிந்து கொள்ள வேண்டியது முக்கியம்.

ஆன்மாக்களாகிய நம்முடைய சிறுமை: நம்முடைய பல்வேறு துக்கங்களையும், அவைகளினின்று நாமே நம்மை விடுவித்துக் கொள்ள முடியாமையையும் தெளிந்து கொள்ளல். இதனை நாமறிந்தாலொழியப் பரமனை நாமடைய வேண்டுமென்னு மவா நமக்கேற்படாது.

நாம் பரனை யடையும் வழியின் தன்மை: தெரியாத ஊருக்குச் செல்வோர் தெரிந்தவர்களை வழி கேட்டறிந்து கொள்வதுபோல் நம்க்குத் தெரியாத வைகுந்த விண்ணகருக்குச் செல்லும் வழியின் தன்மையை அதனைத் தெரிந்தார் வாய்க் கேட்டுணர்தல்.

அவ்வழியிலுள்ள இடையூறுகள்: பிரயாணிகன் தான் செல்லுமூருக்கு வழி யறிந்து கொள்ளுதல் மாத்திரம் போதாது. துஷ்ட மிருகங்களோ அல்லது கள்வர்களோ வழியிலடித்தாலென் செய்வது? ஆகவே புத்தியுள்ள பிரயாணிகள் வழியிலுள்ள இடையூறுகளையும் கேட்டறிந்து அவைகளுக்குத் தகுந்த ஜாக்ரதையுடன்

போகின்றார். அதுபோல் பரனையடையும் வழியிலுள்ள இடையூறுகளையும் நாமறிந்து கொள்ள வேண்டும்.

இவ்வுலகு முதல் பரனுலகு வரையில் நாமடையக் கூடிய பதவிகள்: படித்த ஒருவனுக்குப் பல விதமான உத்யோகங்கள் கிடைக்கக்கூடும். அறிவும் ஜாக்ரதையும் உடையவன் பல உத்யோகங்களையும் சீர்தூக்கிப் பார்த்து நல்ல வரும்படி கிடைக்கக் கூடியதும் நிலைத்திருக்கக் கூடியதுமான உத்யோகத்தையடைகிறான். அவசரக்காரனான அறிவிலி யோஜனையின்றி நிலையற்றதும் அல்பமுமான உத்யோகத்தை அடைந்து விடுகிறான். அதுபோல ஆன்மாக்களுக்கும் பதவிகள் பலவுள. அவைகளின் தன்மைகளை நாம் நன்கறிந்தாலல்லது அவைகளுள் நமக்குச் சிறந்த பதவியை நாம் தெரிந்து கொள்ள முடியாது.

ஸ்ரீகாழிச்சீராமவிண்ணகரம்
ஸந்தானகிருஷ்ணய்யங்கார்.

---

## துண்டு துணுக்குகள்.

அகந்தை செத்தபின் அமலன் தோன்றுவான. ஆடையில்லாதவன் அரை மனிதன். இந்திரையை மார்பில் வைத்தான் இருடீகேசன். ஈசனிடத்துண்மையை அந்தி பகல் வைத்தான். உந்திக்கமலனை யமலையை நாவில் வைத்தான. ஊமையராய் வாழ்தலை உத்தமன் உகவான். எக்காலத்தும் எம்பெருமானடி சேர். எய்ந்தபுகழுடையோன் எம்பிராமானுசன். ஐயைத் தத்துவம் நம்முயிர் என்க. ஒரு தனி முதல்வன் காண் எம்மாதிப்பிரான். ஓதல் ஓதுவித்தல் ஒப்பிலார் தொழில்கள். ஔவிய மவித்தலே ஆக்கத்திற்கடியாம்.

* * *

பருத்தி, கொட்டை வாங்கப்படுதல், பன்னப்படுதல், சுருட்டப்படுதல், நூலாக்கப்படுதல், பாவோடப்படுதல், நெய்யப்படுதல், மடிக்கப்படுதல், விற்கப்படுதல், தோய்க்கப்படுதல், உலர்த்தப்படுதல, உடுத்தப்படுதல், கிழிக்கப்படுதல் என்ற பன்னிரு அவஸ்தைகளை அடைகின்றது. எம்பெருமான் லயாவஸ்தையில் மூலப்ரகிருதியை விபக்தமாக்கி, லோகவ்யவஸ்திதியுண்டாக்கி, அவாந்தரஸ்ருஷ்டியைப்பண்ணி, ரக்ஷித்து, பிர்ம்மாதிகளுக்காக்கி, ப்ரளயத்திலே எடுத்து, எயிற்றிலே வைத்து, வயிற்றிலே வைத்து, உமிழ்ந்து பின் தன் வயின் அடக்கிக்கொள்கிறான். எனவே மூலப்ரகிருதியடைகின்றதும் பன்னிரு அவஸ்தையே.

* * *

திருவாய்ப்பாடியிற் கண்ணனுபவதரித்த திருமாலை பண்வாய் இடைச்

சியான யசோதைப்பிராட்டி பெரியமத்தினாலடித்த புண்ணின் கண் ஈக்கள் மொய்க்க அதனால் அருவருத்து அசைந்தபோது வாரணங்களெட்டும் மகமேருவும், கடலுந், தாரணியும் எல்லாம் சலித்தன. எம்பெருமான் சர்வசரீரி என்பதை இது எளிதில் காட்ட வல்லது கண்டு தெளிக.

---

# பன்மணித்திரள்.

**திருமாலிருஞ்சோலை:** எம்பெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்ற திவ்ய தேசங்கள் பலவற்றுள் தலை சிறந்த பெருமையுடையவை கோயில், திருமலை, பெருமாள்கோயில் என்னும் மூன்றுமேயாம். அம்மூன்றனுள் திருமலை என்பது வடமலையாகிய திருவேங்கடத்தையும் தென்மலையாகிய திருமாலிருஞ் சோலையையுங் குறிக்கும். இத்திருமலை திருமால் குன்றம், இருங்குன்றம், திருமாலிருஞ் சோலை மலை, அழகர் திருமலை என்று பண்டையோரால் வழங்கப் பெற்றுள்ளது. ஆழ்வார்களிற் பெரும்பாலோர் மற்றத்திவ்ய தேசங்களைக்காட்டிலும் இதிற் பெரிதும் ஈடுபட்டுள்ளார். பண்டைத்தமிழ் நூல்களிற் சிலப்பதிகாரம், பரிபாடல் முதலிய நூல்களில் இம்மலைச் சிறப்பு பெரிதும் விரித்துக் கூறப்படுகின்றது.

**தீர்க்கசிந்தயந்தீ:** சிந்தயந்தீ என்பவள் இடைக்குலமாதருள் ஒருத்தி. கண்ணபிரான் திருக்குழலூதற்சிறப்பைக் கேட்டனுபவிக்க ஆய்ப்பெண்கள் அவனிருக்குமிடம் நாடிச்சென்றனர். தன் மாமனாரின் கட்டளைக் கடங்கி நின்ற சிந்தயந்தீ கண்ணனையே தியானஞ் செய்து புண்ணிய பாபங்கள் கழியப் பெற்று அவனைக் கிட்டப் பெறாமையால் வந்ததுக்க மேலீட்டால் மூச்சடங்க அவளது தேகம் தன்னடையே விட்டொழிந்தது: தீர்க்கசிந்தயந்தீயாவர் நம்மாழ்வார். 'இவருக்குப் பிரியாப் பிரியங்கள் ஒருகாலும் முடியாதே பர்யாயேணவுண்டாயிருக்கையாலே இவருக்குச் சிந்தயந்தீப்படி நித்யமாய்ச் செல்லுகையாலே இவரைத் தீர்க்க சிந்தயந்தி யென்றாயிற்று நம்முதலிகள் அருளிச் செய்வது' என்பது ஈடு மஹாப்ரவேசம்.

**மதி மாது:—** எம்பெருமானார் திருவாலி திருநகரிக்கு எழுந்தருளுங்காலை அவ்வூர்த்தெருவில் ஒரு பள்ளப் பெண் நின்றாள். உடையவரின் சிஷ்யர்கள் அவளை விலகி நில் என்றதும் அவள் கூறுவாள். 'ஒருபால் அன்னலம் பூங்கழனி; ஒருபால்வயலாலி மணவாளன் கோயில்; ஒருபால் தேவரீர்கள்; ஒருபால் தோரண நெடுவீதியும் நீணிலா முற்றமும். அடியேன் எங்கே விலகுவேன்'.

பாரத்வாஜி.

# வர்த்தமானங்கள்.

## திருவல்லிக்கேணித்தமிழ்ச் சங்கம்.

---

**தமிழ்த் திருநாட் கொண்டாட்டம்:—** ஈசுவர வருடம் சித்திரை மாதம் முதல் தேதி (13-4-37) செவ்வாய்க்கிழமை மாலை 6-30-மணி முதல் 8-மணி வரை சங்கக் காரியாலயத்தில் தமிழ்த் திருநாட் கொண்டாட்டம் சிறப்பாக நடந்தது. 'தமிழின் பெருமை' என்ற விஷயத்தை ஸ்ரீஉபவே ஆர். கேசவய்யங்கார் ஸ்வாமி உபந்யசித்தார்.

**எம்பெருமானுர் மஹோத்சவக் கொண்டாட்டம்:**-16-4-37உ முதல் 25-4-37 முடிய பிரதி தினம் மாலை 6-30-மணி முதல் 8-மணிவரை சங்கக் காரியாலயத்தில் அடியிற்கண்ட விபரப்படி உபந்யாசங்கள் நடந்தன. (i) ஸ்ரீஉபவே ஆர். கேசவய்யங்கார் ஸ்வாமி. 17, 19, 23, 24-4-37உ களில் முறையே எம்பெருமானுரும் வேதவ்யாசரும்; எம்பெருமானுரும் வால்மீகியும்; எம்பெருமானுரும் பாணினியும்; எம்பெருமானுரும் தேசிகரும் விஷயங்கள் (ii) ஸ்ரீஉபவே வி. நரஸிம்மாசாரியார் ஸ்வாமி: 16, 20, 25 தேதிகளில் எம்பெருமானுரும் ஆழ்வாரும்; எம்பெருமானுரும் திருமங்கை மன்னனும்; எம்பெருமானுரும் ஆண்டாளும்; (iii) 18-ந் தேதி ஸ்ரீஉபவே குரிச்சி ஸ்ரீநிவாசவேதாந்தாசாரியார் எம்பெருமானுரும், ஆளவந்தாரும்(iv) ஸ்ரீஉபவே ஸாதுராமாநுஜாசாரியார் ஸ்வாமி 21-ந் தேதி எம்பெருமானுரும் பட்டரும், (v) சங்கவித்வான் ஸ்ரீஉபவே ஸ்ரீரங்கம் சடகோபாசாரியார் ஸ்வாமி 22-ந் தேதி எம்பெருமானுரும் வரவரமுனியும்.

**கொச்சி மஹாராஜாவுக்குப் பாராட்டு:** 2-5-37 ஞாயிற்றுக்கிழமை 4-மணிக்கு ஸ்ரீவான மாமலை மடத்தில் கொச்சி மஹாராஜாவின் சநாதன தர்ம நெறி நிற்கைக்கு விசேஷபாராட்டுக் கொண்டாட்ட விழா நடந்தது. ஸ்ரீமான் வி. நரஸிம்மாசாரியார் ஸ்வாமி தலைமை வகித்தார். ஸ்ரீமான்கள் யன. ஸ்ரீநிவாசாசாரியார், ஸ்ரீரங்கம் சடகோபாசாரியார், ஆர். கேசவய்யங்கார், வைத்யநாதய்யர், ஆர். நாராயணசாமி அய்யர், யஸ். லக்ஷ்மி நரசிம்மாசாரியார் முதலியோர் பேசினர். விசேஷ தீர்மானங்கள் நிறைவேறின. மாலை 6-மணிக்கு சபை முடிந்தது.

**ஸ்ரீநரஸிம்ம ஜயந்தி:** 23-5-37 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணி முதல் 6மணிவரை திருவல்லிக்கேணி ஸ்ரீவானமாமலை மடத்தில் ஸ்ரீநரசிம்ஹதத்வம் எனும் விஷயத்தை ஸ்ரீஉபவே ஆர். கேசவய்யங்கார் ஸ்வாமி உபந்யசித்தார்.

**நம்மாழ்வார் மஹோத்ஸவக் கொண்டாட்டம்:** அடியிற் கண்ட விபரப்படி சங்கக்காரியாலயத்தில் 24-5-37 முதல் 2-6-37 வரை மாலை 6-30 மணி முதல் 8-30-மணி வரை இடைவிடாது பத்து தினங்கள் உபந்யாசங்கள் நடந்தன. (i) ஸ்ரீஉபவே ஆர். கேசவய்யங்கார் ஸ்வாமி 24, 25, 31 தேதிகளில் சடகோபதத்வம்; ஆழ்வாரும் வள்ளுவரும்; ஆழ்வாரும் தமிழும். (ii) ஸ்ரீமான் ஆர். சந்தான கிருஷ்ணய்யங்காரவர்கள் 27, 1-6-37 தேதிகளில் ஆழ்வாரும் கம்பரும்; திருவாய்மொழியும் கம்பராமாயணமும்' (iii) பண்டித திருவாலி ராமாநுஜாசாரியார் ஸ்வாமி 26தேதி ஆழ்வாரும் தமிழ்க்கவிகளும் (iv) குரிச்சி சே. ஸ்ரீநிவாஸ வேதாந்தாசார் ஸ்வாமி 28தேதி ஆழ்வாரும் ஆளவந்தாரும். (v) பகவத் விஷயம் கீனூர் நரசிம்மாசாரியார் ஸ்வாமி 29 தேதி ஆழ்வாரும் பிராட்டியும் (vi) ஸ்ரீஉபவே ஸ்ரீரங்கம் சடகோபாசாரியார் ஸ்வாமி 30தேதி ஆழ்வாரும் திருமங்கைமன்னனும் (vii) ஸ்ரீமான் யஸ். லக்ஷ்மி நரஸிம்மாசாரியார் அவர்கள் 2தேதி ஆழ்வாரும் எம்பெருமானாரும்.

**திருவள்ளுவர் திருநாள்:** 25-5-37 சங்கக்காரியாலயத்தில் திருவள்ளுவர் திருநாட் கொண்டாட்டம் நடைபெற்றது. காரியதரிசியும் தலைவரும் முறையே வள்ளுவர் பெருமை, வள்ளுவரும் ஆழ்வாரும் என்றவிஷயங்களைப் பற்றி உபந்யாசம் செய்தனர்.

**திருஞானசம்பந்தர் திருநாள்:** 28-5-37 வெள்ளிக்கிழமை சங்கக்காரியாலயத்தில் ஸ்ரீமான் கே. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் திருஞானசம்பந்தர் பிரபாவம் என்பது பற்றி மிக விளக்கமாக அழகியதோர் உபந்யாசம் செய்தார்.

**அப்பர் திருநாள்:** 6-5-37 வியாழக்கிழமை சங்கக்காரியாலயத்தில் ஸ்ரீமான் கந்தசாமி ஓதுவாரவர்கள் அப்பர் சரித்திரத்தை நன்கு உபந்யசித்தார்.

**தனிஉபந்யாசங்கள்:** 16-5-37 மாலை4-மணிமுதல் 6-30-மணிவரை திருவல்லிக்கேணி ஸ்ரீவான மாமலை மடத்தில் ஸ்ரீஉபவே புரிசை நடாதூர் வரதாசாரியார் ஸ்வாமி பக்தி ரஸம் எனும் விஷயம் பற்றி உபந்யாசம் செய்தார். 6-6-37 மாலை 4-45-மணிமுதல் 6-45-மணிவரை அதே யிடத்தில் திருப்பதி சம்ஸ்க்ருத காலேஜ் புரொபஸர் ஸ்ரீஉபவே புரிசை அனந்தான் பிள்ளை கிருஷ்ணமாசாரியார் ஸ்வாமி 'ஸ்ரீவிசிஷ்டாத்வைதம்' எனும் விஷயம் பற்றி மிக அரியதோர் உபந்யாசம் செய்தார்.

**அப்தபூர்த்தி:** காரியதரிசியின் கனிஷ்ட குமாரன் அப்தபூர்த்தி விழாவை யொட்டி 3-5-37 சங்கக்காரியாலயத்தில் ஸ்ரீமான் ஆர். கேசவய்

யங்காரவர்களால் 'ஸ்ரீலக்ஷ்மி நரஸிம்ஹதத்துவம்' எனும் விஷயம் உபந்ய சிக்கப்பட்டது. இஷ்ட மித்ர பந்துக்களுக்கு இரவில் சிறு விருந்து ஒன்று நடந்தது.

**அமலநாதிப்பிரான் தொடக்கம்:** இராயப்பேட்டை அய்யா முதலி தெரு ஆறும் நம்பர் மேன்மாடியில் நடைபெற்று வரும் தமிழ் வகுப்புகளில் 5-5-37 சங்கத்தலைவர் 'அமலனாதிப்பிரான்' தொடக்கம் செய்தார். பிரதி வாரம் காரியதரிசியால் நடத்தப்பட்டு வருகிறது.

**அறுபதாண்டு நிறைவு விழா:** 31-5-37 சங்க உபதலைவர் பகவத் விஷயம் அட்வகேட் வி. நரஸிம்மாசாரியார் ஸ்வாமி அறுபதாண்டு நிறைவு விழா சங்கக்காரியாலயத்தில் நடந்தது. செய்யுளிலும் வசனத்திலும் உப சாரப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன. சங்கத்தலைவர், காரிய தரிசி, ஸ்ரீநிவாஸ வேதாந்தாசாரியார், திருவாலி ராமாநுஜாசாரியார், லக்ஷ்மி நரஸிம்மாசாரியார், ஸ்ரீரங்கம் சடகோபாசாரியார் முதலியோர் அவரது குணங்களை வியந்து கூறினர்.

**பெரிய மஹானின் பிரிவு:** பிரம்மஸ்ரீ தருவை லக்ஷ்மி நாராயணசாஸ் திரியனின் பிரிவாற்றாமையைக்குறித்து சங்கக்காரியாலயத்தில் 13-6-37 மாலை 5-மணிக்கு ஒரு ஸபை நடந்தது. அநேகர் அவரைப்புகழ்ந்துரைத் தனர்.

**மதிப்புரை:** ஸ்ரீவைஷ்ணவம் என்ற ஓர் புத்தகம் வரப்பெற்றோம். இதன்பதிப்பாசிரியர் ஸ்ரீமான் ஆ. ரங்கநாத முதலியாரவர்கள். கிடைக்கு மிடம் சுவர்ணவிலாஸ், 13, பெரிய தெரு, திருவல்லிக்கேணி. விலை ரூபாய் ஒன்றரை. இச்சங்க.வித்வான் ஸ்ரீஉபவே மு. இராகவய்யங்கார் ஸ்வாமி இதற்கரியதோர் முகவுரை எழுதியிருப்பதிலிருந்து இதன் பெருமை நன்கு விளங்கும். இது ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவனிடமும் இருக்க வேண்டியது அவசியம். நம் தரிசன கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ள முதலியாரவர்கள் மேன் மேல் இது போன்ற பல நூல்களைப் பதிப்பிக்குமாறு எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் புரிவானாக.

ப. ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி.

பத்திராசிரியர் பாடிய

# வேதாந்ததேசிகரூசல்.

---

## காப்பு

விண்ணாகி இறையாகி விரசையாகி
　　இசையாகி இருக்காகி இதயமாகி
மண்ணாகி மாணாகி மனந்தானாகி
　　மற்றாகி மனுவாகி மறந்தாராகி
எண்கடந்து கடைப்பட்ட யானுமாகிப்
　　பின்னாக விரகிலியாய்ப்போந்தே என்கண்
கண்ணோக்கக்கடவதிருக்கடவுளாயே
　　காப்புயர்த்த கேசவனார் கழலே காப்பு.

## நூல்

திருவாழத் திருவாழுமார்பர் வாழத்
　　திருமார்பர் திருவடியே வாழவன்னார்
திருவடிப்பூப்போத சடகோபர் வாழத்
　　தெள்ளிய சீரெதிராசர் செங்கோல்வாழ
வருண நெறிச் செவ்விவளம் செழித்துவாழ
　　வைணவர்கள் குடிகுடியாய் வாழவாழச்
சுருதிமுடிக்குருப்புனிதராடிரூசல்
　　சீர் தூப்புல் வேங்கடவராடிரூசல் (1)

பாங்கிலகுபாணினியம் பொற்காலாக
　　வாங்கரிய யாக்கிய மோர்விட்டமாக
ஓங்குபல பூங்கலைகள் பந்தலாக
　　ஆணிமறைச் சங்கிலிகள் நான்குமாக
ஆங்குதிருப்பாடியமே ஆட்டமாகப்
　　பாதுகையாயிர மறையே போகமாக
ஓங்காரநாவொலிக் கோலராடிரூசல்
　　வேதசிரத்தேசிகனாராடிரூசல். (2)

மாற்றரு சந்த நக்கணமே மாடியாக
மன்னு நெறிச்சைமி நியம்மணையுமாக
வீற்றுயர்ந்து வித்தகராய் ஒவ்வோராட்டால்
வழுத்தவழும் வாதவழி யொழியச்சாடிச்
சாற்றுமறை யாடு கொடி நாட்டி நல்லார்
காக்குமறை முடிமிளிர்ந்த குருவாயோங்கி
நாற்றிசைக்கோர் துளக்கறுதேசாடி ஊசல்
நற்றவர்க் கோருற்றதுணையாடி ஊசல் (3)

காடெஞ்சிப்பொய்யர் புறங்காட்டியோடக்
கவடர் குழுகிடுகிடென நடுங்கியாட
நாடெங்கும் நான்மறையர் நாக்கொண்டாட
நல்லுலகு நலம் திகழ்ந்து குடக்கூத்தாட
ஏடெங்கும் நற்பொருளே நேயர் நாடக்
கேசவனார் வண்புகழே தேசம்பாட
ஆடெய்தி மடியழகராடி ஊசல்
ஆரியர்கட் காசிரியராடி ஊசல் (4)

நெற்றிமிசைத்திரு நாமத்தேசுவீச
நூலெனமும் மறை நலமே உரம்குலாவ
ஒற்றிலகு முயர் சாற்றுப்படி துலங்கத்
தோள்மிசைச்சங்காழி திருச்சின்னமின்ன
நற்றவர் கொள் நீள் கரத்துத் தூப்புல்துன்ன
நாமிசையேவழுவாது நாதனோதச்
சுற்றிவரச் சூரியர்களாடி ஊசல்
சோதியதாயோது குருவாடி ஊசல் (5)

சரணென்றே அரணாகு மன்பராடச்
சுருதியுறை நாவர் கரஞ்சண்ட தொடுக்க
வரகவியோர் வாழி திகழ் மொழிவழங்க
ஓசையுயரிருகலைஞ ரூசலேத்தச்
சுரமிசை நற்பத மிசையும் சுத்தர் பாடச்
சிட்டர்காம் கிட்டுதவக்கவரிவீச
வரமருளும் திருவுருவே ஆடி ஊசல்
வாழு திருமறைத்திருவே ஆடி ஊசல் (6)

முப்பத்தீ மாஞ்சைபொழிவேழமாக
மிடற்ற மூத்து மெழுத்து மறைக்கரடியாக
வம்பர் விழுந்தருக்கணவாய் வேங்கையாக
மறைமுடியாய்க்கவிமுழங்கு சிங்கமாகத்
துன்பமெலாம் திடைத்துத்தங்கேளிர் தாங்கும்
துணைனவே தூயவராய்த் தோன்றி யூன்றி
அன்பர் குலங்காக்கு மிறையாடி ரூசல்
இன்ப மருளெம்பெருமானடி ரூசல். (7)

கழிபெருமா தேவரிடைகழியடைந்து
கார்மேனிக் கடவுளராய்க் கனத்துத்தொண்டர்
வழிதழைக்கும் தமிழ்ப்பகவர் விழியேயாகி
ஒளிவிடுமோர் முச்சுடராய் உடன் மிளிர்ந்து
செழுமறையே செந்தமிழாய்ச் சங்கநாதம்
செய்து திருக்கண்டஒலி கொண்டகண்டம்
முழங்கு முதுத்தமிழ் மறையராடி ரூசல்
முத்தமிழ் சேர்முது மறையராடி ரூசல். (8)

ஆசைமிசைத்தழையுமரித்தாளேபோல
ஆண்மைமிசை அறமன்னர்கோலேபோல
ஓசைமிசை உயர் செய்யுட் குணமேபோல
ஓமிசையோங்காரண நூலொலியேபோல
நேசமிசைக்கனிமாறன் பணியேபோல
நாதமிசை யூதுகுழல் சுரமே போலத்
தேசு திகழ் மங்கலமே ஆடி ரூசல்
ஏவுமறைமாதவமே ஆடிரூசல். (9)

'பொய்கை முனிபூதத்தார் பேயாழ்வார் தண்
பொருநல்வரும் குருகேசன் விட்டு சித்தன்
துய்யகுல சேகரனம் பாண நாதன்
தொண்டரடிப் பொடிமழிசை வந்த சோதி
செய்யதமிழ் மங்கையர் கோன் செல்வக்கோதை
சீர்மதுரரோரமுதர் சேர்ந்து வந்து
பெய்யுமருள் மாரி வடிவாடி ரூசல்
பொய்யாத மொழிப்பகவராடி ரூசல். (10)

முடிபொலிந்து துன்னு திரு மறைகள் யாவும்
மறை யாருயங்கமெனமிளிர்ந்த வாறும்
குடியேறு கோயிலென வந்தவெந்தை
உபநிடதக்கடல் கடைந்த அமுதேயான
படியோங்கி அவனோங்குமதியாயோங்கிப்
பாடியமாயோங்கு புகழுடையவர்க்கே
படிகிடக்கும் படைவீரராடி ரூசல்
மறை தாங்குமதிப்பரமராடி ரூசல். (11)

அந்தணரும் அந்தியரும் அரியடிக்கீழ்ச்
சந்தி செயச் சரணநெறித்திருவிளக்கை
நந்தாது நான்மறை நீண்முடி நிறுத்தி
நாதனடிச் சோதிமலர் நலம் துலங்கத்
தந்தருளித்திருவளர்க்கும் தகவே கொண்ட
கொண்டலென வந்துலகு கொள்ளும் வள்ளல்
சந்தமிகு தமிழ் மறையராடி ரூசல்
சீர்கவிதார்க்கிக சிங்கராடி ரூசல். (12)

தண்ணியரைத் தன்னவராய் நண்ணித்தன்னில்
திருவுடையாரென்று திருவுள்ளத்துள்ளும்
புண்ணியனார் மன்னுபுகழ்ப் பதங்கணங்கள்
புந்தியிடை முளைத்தரும்பிப் பூத்தபான்மை
எண்ணியிது வென்னையென எண்ண வொண்ணு
தென்றுமொருவள்ளலிவ ரென்றே கொள்ளப்
பண்ணுமறைக் கண்ணழகராடி ரூசல்
பார்புகழுமோ ரொருவராடி ரூசல். (13)

செய்தவரே யெய்துபயன் யாவும் சேர்க்கும்
சீரியரே யாரியரா யீண்டுத்தோன்றி
எய்தரிய பொறையொன்றே பூண்டியாண்டும்
எம்மடிகளென்றறிஞரேத்த நின்று
வைதவர் தம்வைவை யெலாம் வாழ்த்தாயெண்ணும்
வைணவர்கோனெனப் பெரியோர் பணிந்துபேணும்
கைதவ மானிடரெம்மானடி ரூசல்
கண்ணெக்கும் கருணை முகிலாடி ரூசல் (14)

கண்ணாகிக் கருத்தாகிக் கருணையாகிச்
சொல்லாகிப் பொருளாகித் தொடர்ச்சியாகி
நுண்ணிய பல்லுயிராகி உடலுமாகி
நல்லுருவ உலகாகி நலமேயாகி
எண்ணரிய தனதாகித்தானேயாகி
எல்லாம் தன்னுடலென்ன விரிந்த நாதன்
கண்ணோட்டம் கனத்தகுரு ஆடிரூசல்
கண்ணாகு மெய்யடிய ராடிரூசல் (15)

மிண்மிசைமா மறை மணமே கமழுமாறு
மாதவனாருளொன்றே பொருளாமாறு
விண்ணவருமிங்கு வரவிரும்புமாறு
வேதியர்கள் வேள்வி விருந்தேற்குமாறு
கண்ணனருளுறுதி மறை கண்ணாமாறு
கதியெல்லாம் சடகோபனடியாமாறு
நண்ணுமறைத் தேசிகரே ஆடிரூசல்
நடையாடு மறைமுடியே ஆடிரூசல் (16)

விண்மேவுபத்தி நெறி விளங்கு பத்தர்
வித்தகராயத்தி கிரிச்சிரத்துறைந்த
வண்புகழோன் திருவுருவே யன்னாமோ
அன்றியருள் மாரியெழிலவனதரமோ
திண்ணமெமக் கெவ்வாறென்றா சலாடும்
திருவுள்ளமுள்ளு நலர் திண்ணம் தேறக்
கண்ணொளியாய் வந்தகுரு வாடிரூசல்
காவலரெம் தருமகுரு வாடிரூசல். (17)

விளக்கொளி அத்தி கிரிபதிவேங்கடக்கோன்
விண்ணாகுசிங்கமலை யோங்கு சிங்கன்
துளக்கற்ற வருளமுதத் தென்னரங்கன்
துய்யதிருச்சோலைமலைச் சுந்தரத்தோன்
அளப்பரிய ஆரமுதப்பௌவமெங்கள்
குலக்கடவுள் கேசவனும் கடைக்கணித்தே
களித்துயர்த்தும் குருமூர்த்தியாடி ரூசல்
கலிதவிர்க்கு மாசிரிய ராடிரூசல். (18)

உலக மெலாமன் புயர ஆடிரூசல்
ஊழியமே ஊதியமென்றாடிரூசல்
கலகமெலாம் விலக்கழிய ஆடிரூசல்
ஞாலமெலாம் ஞானமெழ ஆடிரூசல்
குலநெறிகள் குணமுறவே ஆடிரூசல்
குரவர்குணக்கடலாட ஆடிரூசல்
நலமிலங்குதேசிகரே ஆடிரூசல்
நிலத்தேவர் குலத்தேவே ஆடிரூசல் (19)

இருகலையுமொருகலையென்றாடிரூசல்
ஈரடியுமோரடியென்றாடிரூசல்
இருவிழியுமொருவிழியென்றாடிரூசல்
ஈரொளியுமோரொளியென்றாடிரூசல்
இருவழியுமொருவழியென்றாடிரூசல்
ஈருலகுமோருலகென்றாடிரூசல்
பருமறையாம் திருமலையே ஆடிரூசல்
பொறைபுனையும் பரமகுரு ஆடிரூசல். (20)

செந்தமிழும் வடகலையும் சென்னி சேர்ந்து
செழுமறையின் செம்பொருளே சொரியவானோர்
புந்திமலர் மாதவனார் பதமலர்க்கே
பற்பணியும் சொற்பணியும் பரப்பிச்செய்து
சந்தமுகு சடகோபனடியே சூடிக்
சதுமறைக்கோர் முடிச்செல்வக் குருவாய்த்தூப்புல்
வந்தவிரு வேதகலைத்தலைவரூசல்
கேசவனோர் நாலைந்து கனிந்திசைத்தான்.

B

# எதிராசரந்தாதி.

தெரியாத் வாதியர் தேற்றம் விட்டே திருவெட்டெழுத்தின்
உரியாரருள் பெறவேண்டு திரேலுடுவும் பிறையும்
பிரியா மதிட்பெரும் பூதூர் முனிசொன்ன பேச்சைநெஞ்சிற்
றரியாதவறரியாரினி வேறில்லை சத்தியமே. (6)

(வாதியர் - பரசமயிகள்; தேற்றம் - தெளிவு; திருவெட்டெழுத்தின்உரியார் - திருமந்த்ரப்ரதிபாத்யனான ஸ்ரீய:பதி; உடு - நக்ஷத்திரம்; பேச்சு - உபதேசம்.)

சத்தியத்தின் பொருள் தத்துவத்தின் பொருள் தன்னிலுன்னும்
புத்தியத்தின் பொருள் புண்ணியத்தின் பொருள் பூசுரர் தம்
பத்தியத்தின் பொருள் பற்றறுக்கும் பொருள் பற்றறுத்தால்
முத்தியத்தின் பொருள் பூதூர் முனிவன் மொழிந்த பின்னே. (7)

(புத்தியம் - புத்தி; பத்தியம் - வேதம்)

மொழிக்கே கரும்பையுந் தேனையும் வைத்தந்த மொய்குழலார்
விழிக்கே யகப்பட்டு ழலுகின்றீர்கள் மெய்ஞ்ஞான நெஞ்சிற்
சுழிக்கே கொழிக்கும் யமுனைத்துறை முனி சொல்லச் சொன்ன
வழிக்கே நினையுங்கெடவெதிரே வரும் வைகுந்தமே. (8)

(மொய்குழலார் - நெருங்கிய கூந்தலை யுடைய மகளிர்; கொழித்தல் - தெள்ளுதல்.)

வையகத்தே தன்னை வள்ளலென்றேத்தினும் வாய்திறவாக்
கையகத்தே நின்று கண் குளிர்வீர் கருணாகரனை
மெய்யகத்தே வைத்த பூதூர் மன்னன் விரைமலர்த்தாள்
பொய்யகத்தே கிற்கிலு மகலாள் மணப் பூமகளே. (9)

(கை - கீழ்மகன்; அகம் - இடம்; கருணாகரன் - கருணாமூர்த்தியான திருமால்; மெய்யகம் - சத்தியமானஹ்ருதயம்; விரை - மணம்; பூமகள் - ஸ்ரீதேவி

சந்தார் புயத்தெங்களாழ்வார் தமக்குந்ததியருக்கும்
அந்தாதி பத்து மணவாள தாசனலற்றியதால்
நந்தாத குற்ற முண்டாகா தவர்க்கொருநாய் கங்கை நீர்
தன்னுற பந்நீரக் குடித்தாலுந்தீர்த்தத்திற்றாழ் வில்லையே. (10)

(சந்து - சந்தனம்; ததியர் - பூர்வாசாரியர்கள்; தாபம் - வீடாய்.)

அழகியமணவாளதாசர்.

ஸ்ரீ:

# திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.

**சங்க வித்வான்கள்.**

1. ஸ்ரீ உபவே பண்டித பூஷணம் தில்லையம்பூர் சக்ரவர்த்தி ஆசார்ய ஸ்வாமி.
2. ஸேது ஸமஸ்தான வித்வான் ஸ்ரீ உபவே. ஆர். ராகவய்யங்கார் ஸ்வாமி.
3. ஸ்ரீ உபவே மு. ராகவய்யங்கார் ஸ்வாமி.
4. ஸ்ரீ உபவே. ஸ்ரீரங்கம் சடகோபாசாரிய ஸ்வாமி (மாம்பலம்).

**தலைவர்** ... ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள்.

**உப தலைவர்கள்.** ...

1. ஸ்ரீமான் வி. நரஸிம்மாசாரியாரவர்கள்.
2. ,, ஆர். சந்தானகிருஷ்ணய்யங்காரவர்கள்.
3. ,, யஸ். லக்ஷ்மி நரஸிம்மாசாரியாரவர்கள்.

**காரியதரிசியும், பொக்கிஷதாரரும்.** ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐயங்கார்.

**கமிட்டி மெம்பர்கள்.**

1. ஸ்ரீமான் ஆர். இராமசாமி ஐயங்காரவர்கள்.
2. ,, யஸ். கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள்.
3. ,, டி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்காரவர்கள்.
4. ,, ஏ. வெங்கடாசாரியாரவர்கள்.
5. ,, வி. ஷண்முகசுந்தர முதலியாரவர்கள்.
6. ,, யஸ். குமாரசாமி செட்டியாரவர்கள்.
7. ,, இ. கே. சபாபதி முதலியாரவர்கள்.

**காரியாலயம்** ... 42-ஏ. வெங்கடாரங்கம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி.

**முக்கிய நோக்கங்கள்.**

1. தமிழைப் பரவச் செய்தல்.
2. வாரந்தோறும் திருக்குறள் கம்பராமாயணம் முதலிய தமிழ் வகுப்புகள் இலவசமாக நடத்தல்.
3. தமிழ்ப் பெரியார் ஜன்ம தினங்களைக் கொண்டாடல்.
4. தமிழ் வித்வான் பரீக்ஷைக்குப் போகுமவர்களுக்கு வேண்டிய ஒத்தாசை செய்தல்.
5. சங்கவெளியீடாக ஒருபத்திரிகை நடத்தல்.
6. பிராசீனசம்பிரதாய முறைகளைக் காப்பாற்றத்தக்க ஏற்பாடு செய்தல்.
7. புலவர்களைப் போற்றுதல்.
8. திருநாட்களை நன்கு கொண்டாடல்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்,

காரியதரிசி.

Printed at the Lakshmi Kantha Press, 405, High Road, Triplicane
and published by P. R. Tirumalai Ayyangar at 42-a, Venkatrangam Pillai St., Triplicane, Madras.